…as a News Paper பக்கங்கள் 04 விலை: ரூபா 5-00

02-5-1993

# ஈழநாதம்

ELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

…ம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 சித்திரை 18 [01-05-93] சனிக்கிழமை ஓசை 72

## விசேட பதவியில் உள்ள ஆசிரியருக்குப் பதவி உயர்வு

1980-ம் ஆண்டுக்கு முன்னர் விசேட பதவி 2-ல் உள்ள அனைத்து ஆசிரியர்களும் 21-04-1992-ம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரக்கூடியதாக பிரதிக் கல்விப் பணிப்பாளர்களாகப் பதவி உயர்வு பெறவுள்ளனர். இதற்கான அமைச்சரவையின் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளதாகக் கல்வி, உயர்கல்வி அமைச்சு அதிகாரிகள் தம்மிடம் தெரிவித்துள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் தெரிவித்துள்ளார். 1980-ம் ஆண்டில் விசேட பதவி - 2 இல் உள்ளவர்கள் அனைவரும் 21-04-1982-ம் திகதியிலிருந்து கல்விச்சேவை வகுப்பு - 5க்கு பதவி உயர்வு வழங்கப்பட்டு 01-01-88-ம் திகதியிலிருந்து கல்வி நிர்வாக சேவை வகுப்பு - 3 க்கு பதவிஉயர்த்தப்பட்டு 21-04-1992ம் திகதியில் இருந்து கல்வி நிர்வாகசேவை வகுப்பு - 2 க்கு பதவி (4 ஆம் பக்கம் பார்க்க)

# இன்று கலவரம் வெடிக்கலாம்

# கொழும்பில் தீவிர பாதுகாப்பு

## மேலதிக பொலிஸார் கடமையில்

[கொழும்பு]

கொழும்பில் இன்று நடைபெறும் மேதின ஊர்வலங்கள், கூட்டங்களில் கலவரங்கள் வெடிக்கலாம் என சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் ஊகம் தெரிவித்தன. இதனையடுத்து விசேட பாதுகாப்புக்கென மேலதிகமாக 2000 பொலிசார் கொழும்பு வந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

லலித் அத்துலத் முதலியின் இறுதி ஊர்வலத்தில் அரசுக்கு எதிரான கலகங்கள் வெடித்ததைப் போன்று எதிரணியினரின் மேதின ஊர்வலத்தை யடுத்தும் கலகங்கள் ஏற்படலாம் என பொலிஸ் வட்டாரங்களில் எதிர்பார்க்கப்படுவதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

இம்முறை மேதினத்தின் போது படுகொலை செய்யப்பட்ட ஜ ஐ. தே. மு. தலைவர் லலித்தை நினைவு கூருமாறு எதிரணியினர் அழைப்பு விடுத்துள்ளமையும் நிலைமையை பதற்றத்திற்குள்ளாக்கியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை விசேட கலவ (4 ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலுக்கு தூதுவர் பதவி

(கொழும்பு)

சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவிருந்த ஜெனரல் சிறில் ரணதுங்கவிற்கு சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா அவுஸ்திரேலிய தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளதற்கான கடிதத்தை வழங்கினார்.

## வீரச்சாவு



லெப். அன்ரன் (மாமூலன்)

திருமலை மாவட்டம் கந்தளாயில் 10-7-92 அன்று சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிமோதலில் விழுப்புண் அடைந்த போராளி ஒருவர் நேற்று வீரச்சாவடைந்தார்.

லெப்டினன்ட் அன்ரன்/மாமூலன்(யோர்க் அன்டன் றமேஸ்-யு. சி குவாட்டஸ், காந்தி நகர்-திருமலை) என்பவரே வீரச்சாவு அடைந்தவராவார்.

## மேதின ஊர்வலத்திற்கு வெள்ளை கொடியுடன் வருக

### ஜ ஐ தே. முன்னணி கோரிக்கை

[கொழும்பு]

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான 6 எதிர்க் கட்சிகளின் மேதினக் கூட்டம் கம்பல் பூங்காவில் நடைபெறவுள்ளது. இதில் காலஞ்சென்ற லலித் அத்துலத் முதலியின் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் பங்கு பற்றுகின்றது.

இதேவேளை மேதின ஊர்வலத்திற் கலந்து கொள்ள வரும் தமதுஆதரவாளர்களை வெள்ளைக்கொடியுடன் வருமாறு ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

## தேர்தலை முன்னிட்டு 'கிரிமினல்கள்' விடுதலை

(கொழும்பு)

கொலை மற்றும் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக சிறைவைக்கப்பட்டிருந்த பலர் பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கின்றனர் என எதிர்க் கட்சிகள் தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்துள்ளது.

இவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டது குறித்து பொலிசார் ஆட்சேபம் தெரிவிக்கவில்லை எனவும் எனினும் இதுகுறித்து நீதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வருமாறும் எதிர்க்கட்சிகள் கோரியுள்ளன.

வெடிகுண்டு வாகனம்இரண்டு கொழும்பில் இருப்பதாக கூறப்படும் செய்தி குறித்தும் அவர்கள் பிரஸ்தாபித்தனர்.

இதேவேளை ஈ. பி. டி. பி. தொடர்பாகவும் தேர்தல் ஆணையாளரின் கவனத்திற்கு அவர்கள் கொண்டுவந்தனர்.

ஈ. பி. டி. பி. தொடர்பாக முடிவுகளை எடுக்கவேண்டி (4 ஆம் பக்கம் பார்க்க)

…த்துலத்முதலி கொலை

## …ரணையை திசைதிருப்ப அரசாங்கம் முயற்சி

…அத்துலத் முதலியின் …தொடர்பாக விசா…ள திசை திருப்ப…ம் திட்டமிட்டுச்…கின்றது என ஜன…க்கிய தேசிய முன்ன…செயலாளர் ஜி. எம். …சந்திர தெரிவித்தார்.

ஒரு கட்டமாகவே …ியின் முக்கிய தலை… மீது குற்றச்சாட்டுக் …அரசாங்கம் தெரிவிக்கின்றது என்றும், அரசாங்கம் தன்னுடைய சகல சக்திகளையும் இதற்குப் பயன்படுத்தும் எனவும் கருத்துத் தெரிவித்தார்.

இதேவேளை கிருலப்பனை முகலன் வீதியில் இருந்த சடலம் ஏற்கனவே கொலைசெய்யப்பட்டு அங்கு கொண்டுவந்து போடப்பட்டது என பலர் கருத்துத்தெரிவிப்பதாக அவர் தெரிவித்தார்.

## …சாரணையிலிருந்து தப்ப …மினி குழுவினர் முயற்சி

### சிறிசேனகூரே குற்றச்சாட்டு

…ரணையைத் திசை …டி.யு.என்.எப்பினரும், …இ'சாநாயக்காவும் …செய்வதாக ஐ.தே.க. …ளரும் அமைச்சருமான …ரகூரே கூறியுள்ளார்.

…மேலும் கூறுகையில், ஐக்கிய தேசியக் கட்சி மீது தொடர்ச்சியாகக் கொலைக் குற்றத்தைச் சுமத்துவதன் மூலம் விசாரணையிலிருந்து தப்பிக்க காமினியும் அவரது குழுவினரும் முயற்சிப்பதாக தெரிவித்துள்ளார்.

## …னுதாபத்தால் வாக்குகள் …றிவிடப் போவதில்லை

### – பிரேமதாசா

…யமான ஒருவர் கால…. அவருக்கு அஞ்சலி …துவது, துக்கம் அனுஷ்…, கொடிபறக்கவிட்டு …னுதாபத்தை தெரி… என்பன பண்டு …இருந்துவரும் பழக்க… இதனால் எல்லாம் …மனம் மாறி வாக்களி…வார்கள் என்று எதிர்…க முடியாது என சிறி… ஜனாதிபதி பிரேமதாசா கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில், மக்கள் ஐ. தே. கவிற்கே வாக்களிப்பர் என்றும், ஏழு மாகாண சபைத் தேர்தல்களிலும் ஐ. தே. கவே வெற்றி பெறும் என்றும், ஐ. தே. கவினர் வெற்றி பெறுவது இப்போதே உறுதியாக்கப்பட்டு விட்டதாகவும் குறிப்பிட்டார்.

…தின் இறுதி ஊர்வலம்

## …வெப்பில் ஈடுபட்டோர் மீது சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

அத்துலத்முதலியின் ஊர்வலத்தின் போது …துக் குழப்ப முற்பட்ட… இனங்கண்டு சட்ட…ம்பு பிராந்திய பொலிஸ் மா அதிபர் ஏ. எஸ். செனவிரத்தினா நேற்று முன்தினம் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# இன்று மாபெரும் எழுச்சிப் பேரணி

## ...றிவிடப் போவதில்லை

– பிரேமதாசா

...யமான ஒருவர் கால
... அவருக்கு அஞ்சலி
...துவது, துக்கம் அனுஷ்
..., கொடிபறக்கவிட்டு
...னுதாபத்தை தெரி
... என்பன பண்டு
... இருந்துவரும் பழக்க
... இதனால் எல்லாம்
... மனம் மாறி வாக்களி
...வார்கள் என்று எதிர்
... முடியாது என சிறி
...ஜனாதிபதி பிரேம

தாசா கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில், மக்கள் ஐ.தே.கவிற்கே வாக்களிப்பர் என்றும், ஏழு மாகாண சபைத் தேர்தல்களிலும் ஐ.தே.கவே வெற்றி பெறும் என்றும், ஐ.தே. கவினர் வெற்றி பெறுவது இப்போதே உறுதியாக்கப்பட்டு விட்டதாகவும் குறிப்பிட்டார்.

...தின் இறுதி ஊர்வலம்

## ...வைப்பில் ஈடுபட்டோர் மீது சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

... அத்துலத்முதலியின்
... ஊர்வலத்தின் போது
...துக் குழப்ப முற்பட்ட
... இனங்கண்டு சட்ட
...கை எடுக்கப்படும்
... பிரதிப் பொலிஸ் மா
...கூறியுள்ளார்.
...ச் சொத்துக்களுக்கு
...ளைவித்தது; தீ
...து; குழப்பம்
...த்தது போன்ற குற்
...ல்களில் ஈடுபட்ட
...னங்காணப்படும் சக
... சட்ட நடவடிக்கை
...டும் என்று கொழு

ம்பு பிராந்திய பொலிஸ் மா அதிபர் ஏ. எஸ். செனவிரத்தினா நேற்று முன்தினம் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிடுகையில், இற்றைவரை பதினைந்துபேர் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் இவர்களில் மூவர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களோடு அனுமதிக்கப்பட்டதாகவும், ஆறு பேர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றதாகவும் தெரிவித்துள்ளார்.

## ...ணீர்ப் புகைக் குண்டு ...னத்திலிருந்து வீசவில்லை

### விமானப்படையினர் மறுப்பு

... அத்துலத் முதலியின்
...ர்வலம் நடைபெற்ற
... விமானத்திலிருந்து
...ர்ப் புகைக்குண்டு வீசும்
...ல் விமானப் படைக்கு

சொந்தமான எந்த ஒரு விமானமும் ஈடுபடவில்லை என்று விமானப்படைத் தலைமையகம் திட்டவட்டமாகக் கூறியுள்ளது.

...எதிரணியினர் ... ஊர்வலத்தைப் போன்று எதிரணியினரின் மேதின ஊர்வலத்தை யடுத்தும் கலகங்கள் ஏற்படலாம் என பொலிஸ் வட்டாரங்களில் எதிர்பார்க்கப்படுவதாக ஏஜென்ஸி செய்திகள் ... பட்ட ஜ ஐ.தே.மு. தலைவர் லலித்தை நினைவு கூருமாறு எதிரணியினர் அழைப்பு விடுத்துள்ளமையும் நிலைமையை பதற்றத்திற்குள்ளாக்கியுள்ளதாக செய்திகள்

## மேதின ஊர்வலத்திற்கு வெள்ளை கொடியுடன் வருக

### ஜ ஐ தே. முன்னணி கோரிக்கை

[கொழும்பு]

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான 6 எதிர்க் கட்சிகளின் மேதினக் கூட்டம் கம்பல் பூங்காவில் நடைபெறவுள்ளது. இதில் காலஞ்சென்ற லலித் அத்துலத் முதலியின் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் பங்கு பற்றுகின்றது.

இதேவேளை மேதின ஊர்வலத்திற் கலந்து கொள்ள வரும் தமதுஆதரவாளர்களை வெள்ளைக்கொடியுடன் வருமாறு ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

## தேர்தலை முன்னிட்டு 'கிரிமினல்கள்' விடுதலை

(கொழும்பு)

கொலை மற்றும் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக சிறைவைக்கப்பட்டிருந்த பலர் பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கின்றனர் என எதிர்க் கட்சிகள் தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்துள்ளது.

இவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டது குறித்து பொலிசார் ஆட்சேபம் தெரிவிக்கவில்லை எனவும் எனினும் இதுகுறித்து நீதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வருமாறும் எதிர்க்கட்சிகள் கோரியுள்ளன.

வெடிகுண்டு வாகனம்இரண்டு கொழும்பில் இருப்பதாக கூறப்படும் செய்தி குறித்தும் அவர்கள் பிரஸ்தாபித்தனர்.

இதேவேளை ஈ.பி.டி.பி. தொடர்பாகவும் தேர்தல் ஆணையாளரின் கவனத்திற்கு அவர்கள் கொண்டு வந்தனர்.

ஈ.பி.டி.பி. தொடர்பாக முடிவுகளை எடுக்கவேண்டி

(4 ஆம் பக்கம் பார்க்க)



### லெப். அன்ரன் (மாமுலன்)

திருமலை மாவட்டம் கந்தளாயில் 10-7-92 அன்று சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிமோதலில் விழுப்புண் அடைந்த போராளி ஒருவர் நேற்று வீரச்சாவடைந்தார்.

லெப்டினன்ட் அன்ரன்/மாமுலன்(யோர்க் அன்டன் றமேஸ்- யு. சி குவாட்டஸ், காந்தி நகர்-திருமலை) என்பவரே வீரச்சாவு அடைந்தவராவார்.

# இன்று மாபெரும் எழுச்சிப் பேரணி ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தொழிலாளர்தினமான மேதினம் இன்று யாழ். குடாநாடெங்கும் எழுச்சி பொங்க அனுஷ்டிக்கப்படவிருக்கின்றது. இன்றைய எழுச்சி பூர்வ மேதினத்தையொட்டி குடாநாடெங்கும் எழுச்சிக்கோலம் பூண்டுள்ளது.

மேதினத்தையொட்டி யாழ். குடாநாட்டில் மாபெரும்எழுச்சிப்பேரணியும் பொதுக்கூட்டமும் நடைபெறவுள்ளன. இதற்கான சகல ஏற்பாடுகளும் நேற்று மாலையுடன் நிறைவடைந்துள்ளன. கண்டி வீதி-ஆஸ்பத்திரி வீதிச் சந்தியில் இருந்து இன்று மாலை 2.00 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது. இப்பேரணியில் யாழ். குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் கோட்ட ரீதியாக அணிதிரளும் மக்கள் பல்லாயிரக்கணக்கில் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஊர்வலத்தில் கலந்துகொள்ளும் மக்களின் நலன்கருதி போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அத்துடன் எழுச்சிப் பேரணி செல்லும் வீதியின் பல்வேறு பகுதிகளில் தாகசாந்தி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

குடாநாட்டில் உள்ள துவிச்சக்கரவண்டி திருத்தும் நிலையங்கள், ரயர் ஒட்டும் கடை எரிபொருள்கடைகள் தவிர்ந்த ஏனைய வர்த்தக நிலையங்கள், தொழில் நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்கள் ஆகியவற்றை மூடிவிட்டு தொழிலாளர்கள் அனைவரும் எழுச்சிப் பேரணியில் கலந்துகொள்வார்கள்.

மேற்படி எழுச்சிப் பேரணி செல்லும் வீதிகள் எங்கும் எழுச்சிக் கோலமாகக் காட்சியளிக்கின்றது. சிவப்பு, மஞ்சள் வர்ணத் தோரணங்கள், மின் விளக்குகள் போன்றவற்றால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

மேதினத்தையொட்டி வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் உட்பட தமிழீழத்தின் பல்வேறு தொழிலாளர் அமைப்புக்கள் அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

### திறந்திருக்கும்

மே தினத்தை முன்னிட்டு மக்களின் நன்மை கருதி துவிச்சக்கரவண்டி திருத்தும் கடைகளும், டயர் ஒட்டும் கடைகள்,எரிபொருள் கடைகள்என்பனவும் திறந்திருக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதென யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.



### வீரவேங்கை புலித்தேவன்

நேற்று முன்தினம் காலை 11-30 மணியளவில் வவுனியா சாளம்பைக்குளம் காட்டுப் பகுதியில் வைத்து சிறிலங்கா ராணுவத்தினரும், புளொட் தேசவிரோதிகளும் மறைந்திருந்து தாக்கியதில் வீரவேங்கை புலித்தேவன் (சின்னையா

[4 ஆம் பக்கம் பார்க்க]

# 'ஜலன்ட்' பத்திரிகைக்கு தொலைபேசி மிரட்டல்

## ...ற்றாக நாசமாக்குவோம் என எச்சரிக்கை

(கொழும்பு)

...லண்ட் பத்திரிகையை
...ரியிடும் உபாலி குறூப்
...வனத்தை முற்றாக நாசம்
...யப் போவதாகவும் அதன்
...யர்களைத் தாக்கப்போவ
...ும் அந்த நிறுவனத்திற்
...ல அநாமதேய தொலை
...மிரட்டல்கள் வந்துள்ள
...அந்நிறுவன செயலாளர்
... சீவலிரத்வத்த
... செய்தி ஸ்தாபன
...ற்குத் தெரிவித்தார்.
...ர் மேலும் தெரிவிக்கை
...சனிக்கிழமை (இன்று)இந்
...னம் நாசம்செய்யப்படும்
...ம்தொழிலாளர்கள் தாக்
...வார்கள்என்றும் நேற்று
...னம் பல தொலைபேசி
...ல்கள் வந்ததாகவும்,
...றித்து பொலிஸ் மா

அதிபருக்கும், ஏனைய பொறுப்பு வாய்ந்த பொலிஸ் அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு வழங்குமாறு கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இளைஞர் சடலத்தை அடையாளம் காண்போருக்கு

## இரண்டு லட்சம் ரூபா சன்மானம் அறிவிப்பு

(கொழும்பு)

லலித் கொலை செய்யப்பட்ட இடத்திலிருந்து சிறிது தூரத்தில் கிருலப்பனை முகலன் வீதியில் காணப்பட்ட இளைஞரின் சடலத்தை அடையாளம் கண்டு கூறுபவர்களுக்கு 2 லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

கொலைக்கு பொறுப்பானவர்களை அடையாளம் காண்பவருக்கு 50 லட்சம் ரூபா சன்மானம் தரப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

முன்னதாக சடலமாக மீட்கப்பட்ட இளைஞர் அப்பையா பாலகிருஷ்ணன் என்று அவரிடமிருந்த அடையாள

(4 ஆம் பக்கம் பார்க்க)

முல்லை மாவட்டத்தில்

## பயணிகள் பேருந்து மீது உலங்குவானூர்தி தாக்குதல்

[முல்லைத்தீவு]

முல்லை மாவட்டத்தில் மக்கள் பேருந்து மீது சிறிலங்கா விமானப்படையின் உலங்குவானூர்தி ஒன்று கலிபர் தாக்குதலை நடாத்தியது. இதில் பொதுமக்களுக்குஎதுவித சேதமும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த புதன்கிழமை காலை 9-30 மணியளவில் முறிப்புப் பகுதியில் வீதியால் பயணிகளை ஏற்றிச் சென்றுகொண்டிருந்த பயணிகள் பேருந்து ஒன்றின் மீதுசிறிலங்கா உலங்குவானூர்தி ஒன்று கலிபர் தாக்குதலை நடாத்தியுள்ளது.

இக் கலிபர் தாக்குதல்களால் எதுவித சேதமும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை காலை 11 மணியளவில் தண்ணீரூற்று, முள்ளியவளை, முறிப்பு ஆகிய பகுதிகளை இரு குண்டுவீச்சு விமானங்கள் நோட்டமிட்டுச் சென்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

புலிகளின் அணி கொழும்பில்

## பொலிசாரின் அறிவிப்பிற்கு இராணுவம் மறுப்பு

(கொழும்பு)

இராணுவத் தலைமையலுவலகம் மீது குண்டுத்தாக்குதலை நடாத்த புலிகளின் அணியொன்று கொழும்பு வந்துள்ளதாக பொலிஸ் புலனாய்வுத்துறையினர் வெளியிட்டுள்ள செய்தியினை இராணுவத் தலைமைப்பீடம் மறுத்துள்ளது. இச் செய்திக்கு ஆதாரம் எதுவும் இல்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இவ் அறிவிப்பு

(4 ஆம் பக்கம் பார்க்க)

கொழும்பு பல்கலைக்கழகத்திற்குள்

## இல. இல்லாத வாகனத்தில் புகுந்தோர் அட்டகாசம்

(கொழும்பு)

இலக்கத் தகடு இல்லாத வாகனத்தில் கொழும்பு பல்கலைக் கழக வளவிற்குள் அத்துமீறிப் பிரவேசித்த ஒரு குழுவினர் லலித் அத்துலத்முதலிக்கு அஞ்சலி செலுத்தி கட்டப்பட்டிருந்த பதாகைகளை அறுத்துக் கொண்டு சென்றுள்ளனர்.

இலக்கம் இல்லாத ஐந்து வாகனத்தில் வந்த குழுவினரே இவ்வாறு செய்தனர் என்றும் இக் குழுவினர் அவர்களின் ஓட்டப்பட்ட 'போஸ்டர்' மீது கறுப்பு மை பூசினார்கள் என்றும் தெரியவருகின்றது.

## நிர்வாக சேவைப்பரீட்சைக்கு வயதெல்லை உயர்வு

(கொழும்பு)

இந்த ஆண்டில் இலங்கை நிர்வாக சேவைக்கான போட்டிப் பரீட்சைக்கு தோற்ற இருப்போரின் வயதெல்லை 31 ஆக உயர்த்தப்பட்டுள்ளதாக பொது நிர்வாக மாகாண சபைகள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

1987 - 1988ஆம் ஆண்டு காலப்பகுதியில் சித்தியடைய வேண்டிய பல்கலைக்கழக மாணவர்கள் தமது பட்டப் படிப்பை 1990 - 1991 ஆம்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### காணியும் வீடும் விற்பனைக்குண்டு

கண்டி வீதி, மிருசுவில் சந்தைக்கருகாமையில் சகல வசதிகளுடனும் அமைந்த வீடு, கிணறு, தென்னை மாபோன்றவற்றுடன் அமைந்த 10பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:- திருமதி யோசப் ''ஜீவோதயம்'' கண்டி வீதி, மிருசுவில். (சி/3396)

### தேவை

5KV இற்கும் 10KV இற்கும் இடையே வலு உடையதும் டீசலில் இயங்கக் கூடியதுமான ஜெனரேற்றர் தேவை. தொடர்பு: நளினி கிறைண்டிங் மில் 730, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (4786)

### கசற்றேடியோக்களா! கடிகாரமா!!

உங்கள் கடிகாரங்களையும் றேடியோக்களையும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள். டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். கிளை கண்டி வீதி, சாவகச்சேரி (சி-6541)

### மனித மேம்பாட்டுக் கழகம் அங்குரார்ப்பணம்

வத்திராயன் வடக்கு ஸ்ரீ முருக மூர்த்தி ஆலயத்திற்கு அருகாமையில் இருக்கும் வி. எஸ் ஸ்ரீ கந்தசாமியின் கட்டிடத்தில் மனித மேம்பாட்டுக் கழகம் என்னும் சமூக சேவை நிலையம் 6-5-93 அன்று காலை வைபவரீதியாக ஆரம்பமாகும் சமூக சேவையில் ஆர்வம் உள்ளவர்கள் பங்கு பற்றவும். (4787)

### பழைய பொருட்கள் உத்தரவாதத்துடன்

பல ஆண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்ட சுவர்மணிக்கூடுகள் நவநாகரிக பாவனைக்கு வந்துள்ளமையால், உங்கள் பழைய சுவர் மணிக்கூடுகள் யாவும் அனுபவசாலியின் மூலம் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படுகிறது. வாரத்திற்கு இரு மணிக்கூடுகள் மட்டும் திருத்தப்படும். டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (6542)

## ஆனந்தம் அம்மாமி அதிவிசேட தயாரிப்பு

உங்கள் மங்கள வைபவத்தை மெருகூட்டுவதற்கு நற்சுவை உணவு படைக்க 100 வீதம் சுத்தமான தயாரிப்பான ஆனந்தம் அம்மாமி அப்பளம் வெளிவந்திருக்கிறது. வாங்கி ஆனந்தமடையுங்கள்.

கிடைக்குமிடங்கள் சில:-

சாவகச்சேரி:- விநாயகர் ஸ்டோர்ஸ், ஸ்ரீவிக்கினேஸ்வரா ஸ்ரோர்ஸ், சன்றைஸ் றெடர்ஸ், சிவா றேடிங் கொம்பனி, சின்னத்தம்பி அன் கோ. கொடிகாமம்:- முருகன் ஸ்டோர்ஸ் திருவருள் ஸ்டோர்ஸ், ராசேஸ்வரி ஸ்ரோர்ஸ், கண்ணண் களஞ்சியம், மார்க்கற் குமார். கைதடி:- ஸ்ரீகணேசா ஸ்ரோர்ஸ் லீலாவதி ஸ்டோர்ஸ் ஸ்ரீ சச்சிதானந்தா என்டர்பிறைஸ்சஸ் மேற்குறிப்பிட்ட கடைகளில் வழமையான ஆனந்தம் அப்பளம் கிடைக்கும். (4791)

உ

சாவகச்சேரி சங்கத்தானை இத்தியடி

வீரகத்தி வினாயகர் தேவஸ்தானம்

## 6-ம் நாள் அலங்கார உற்சவ விஞ்ஞாபனம்

காலம்: 01-05-1993 சனிக்கிழமை இரவு

கலைநிகழ்ச்சிகள்:

நாதஸ்வர கலாமணி, நாதஸ்வர இசைப் பேரறிஞர் கே. எம். பஞ்சாபிகேசன்
நாதஸ்வர இசைச் செல்வன் எம். பி. நாகேந்திரன்
நாதஸ்வர வித்துவான் எம். பி. விக்னேஸ்வரன்
குழுவினரின்
மங்கள வாத்தியக் கச்சேரி

அளவையூர் பார்வதி சிவபாதம் குழுவினரின்
இன்னிசைக் கச்சேரி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
6-ம் நாள் உபயகாரரும்,
பரிபாலன சபையினரும்.

(சி-6539)

## 31-ம் நாள் கண்ணீர் அஞ்சலி



செல்வி நாகேஸ்வரன் யோகதர்சினி [நித்யா]

ஈன்றவள் மடியில்: 07. 09. 1989
இறைவன் அடியில்: 01. 04. 1993

திதி: 1. 5. 1993

அள்ளி அணைத்திட ஆசைக்கோர் மகளாய்
கிள்ளி மகிழ்ந்திட அண்ணர் நால்வருக்கோர் தங்கையாய்
பள்ளி செல்லும் வயதில் பள்ளி கொண்டு
தள்ளிப் போய் தரணி தனில் நாம் பரிதவிக்க
புவித்தாய் மடியில் உறங்குகிறாயே நித்தியாவே!

உன் பிரிவால் வாடும்
அப்பா. அம்மா, அண்ணாமார்,
உற்றார், உறவினர்.

நாவற்காடு,
வரணி [4755]

O/L 93 DAY CLASS

ESTD 1973 REGD No J/7993

The Express Institute

IRUPALAI KOPAY

MATHS
MR. T. VARATHARAJAH

ஏனைய பாடங்களுக்கும் அவ்வாறே திறமைமிக்க ஆசிரியர்கள்

(சி/6526)

## நினைவு கூருகின்றோம்... 1993-05-01

1988 ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னார் முழங்காவில் நாச்சிக்குடாப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

2-ம் லெப் சைமன் (கபிரியேல் அந்தோனிப்பிள்ளை -தாமரைக்குளம், அடம்பன்-மன்னார்)

1989 ஆம் ஆண்டு வவுனியாவில் இந்தியப்படையினரின் சிறை உடைப்பின்போது வீரச்சாவெய்திய,

பெனா (தில்லையம்பலம் தியாகராசா-கள்ளியடி, இலுப்பைக் கடவை-மன்னார்)

இதே சம்பவத்தில் வீரச்சாவெய்திய நாட்டுப்பற்றாளர்கள் -

செல்லப்பா பாலேந்திரன் (இராசேந்திரன்குளம்-வவுனியா)

கந்தையா கணேசலிங்கம் (அனந்தர்புளியங்குளம் வவுனியா)

சிறிவையாமுரி செல்வம் (இடதுகரை, முத்தையன் கட்டு முல்லைத்தீவு)

யாழ் பருத்தித்துறை ஆத்தியடிப் பகுதியில் இந்தியப் படையினருடனான நேரடிச்சமரில் விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய.

(பருத்தித்துறை பிரதேசப்பொறுப்பாளர்)

கப்டன் மொறிஸ் (தியாகராசா பரதராசன்-''சுந்தரி வாசா'' ஆத்தியடி, பருத்தித்துறை யாழ்)

லெப். ரம்போ (தணிகாசலம் ஜெகநேசன் பத்திரகாளி ஒழுங்கை, பருததித்துறை யாழ்)

இதே இடத்தில் இந்தியப்படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

வெள்ளை சிறி (வடிவேலு சிறிதரன் - விநாயகர் முதலியார் ஒழுங்கை, பருத்தித்துறை யாழ்)

1991 ஆம் ஆண்டு மகிளூர்ப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மற்றும் தேசவிரோதிகளுடனான சமரில் வீரச்சாவெய்திய

பாலகுமார் (குணரத்தினம் கிரிதரன்-பெரியகல்லாறு-மட்டு)

மட்டு-பெரியபுல்லுமலை அரந்தலாவை 19ம் கட்டை உன்னிச்சை ஆகிய நான்கு முகாம்களிலிருந்து வெளியேறிய இராணுவம் அப்பகுதியை சுற்றிவளைத்து மேற்கொண்ட நடவடிக்கையின் போது 35 ம் கிராமத்தைச் சேர்ந்த தந்தை, மகன் உட்பட கொலைசெய்யப்பட்ட 06 தமிழ்மக்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-6537)

உத்தரவாதத்துடன்

பல ஆண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்ட சுவர்மணிக் கூடுகள் நவநாகரிக பாவனைக்கு வந்துள்ளமையால், உங்கள் பழைய சுவர் மணிக் கூடுகள் யாவும் அனுபவசாலியின் மூலம் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படுகிறது. வாரத்திற்கு இரு மணிக்கூடுகள் மட்டும் திருத்தப்படும். டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (6542)

வரணி [4755] ... உற்றார், உறவினர்.


O/L 93 DAY CLASS

ESTD 1973 REGD No J/7993

The Express Institute

IRUPALAI KOPAY

MATHS MR. T. VARATHARAJAH

ஏனைய பாடங்களுக்கும் அவ்வாறே திறமைமிக்க ஆசிரியர்கள்

(சி/6526)


...மட்டு-பெரியபுல்லுமலை அரந்தலாவை 19ம் கட்டை உன்னிச்சை ஆகிய நான்கு முகாம்களிலிருந்து வெளியேறிய இராணுவம் அப்பகுதியை சுற்றிவளைத்து மேற்கொண்ட நடவடிக்கையின் போது 35ம் கிராமத்தைச் சேர்ந்த தந்தை, மகன் உட்பட கொலைசெய்யப்பட்ட 06 தமிழ்மக்கள்.

ஆகியோரை இந்நாளில்

நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-6537)

# மே நாள் - 1993

★ சமுதாய ஏற்ற தாழ்வுகளையும் சமூக அநீதிகளையும் சுரண்டலையும் ஒழித்து

★ நீதியும் அறமும் சார்ந்த பொதுநல சமுதாயத்தை உருவாக்கி

★ வலுவிழந்தவர்களுக்கும் ஏழைகளுக்கும் சேவை செய்து

★ மனிதனிடம் உள்ள மனிதத்துவத்தைக் கௌரவித்து

★ சுய நிறைவையும், சேவையையும் தனது வேத வாக்காகக் கொண்ட

கூட்டுறவு அமைப்பில் அனைவரும் மே நாளில் அணிதிரள்வதன்மூலம் தமிழீழ பொருளாதார கலாசார அமைப்பில் பசுமைப் புரட்சியை முன்னெடுப்போம் என தொழிலாளர் தினமாகிய இன்று திடசங்கற்பம் பூணுவோம்.

★ அனைத்து ஒடுக்கப்பட்டவர்களையும் அணைத்துச்செல்வோம்.

★ மேதினத்தின் மேன்மையினை காதினிக்க பறை சாற்றுவோம்.

**- கூட்டுறவாளர்**

குறிப்பு : சகல கூட்டுறவாளர்களையும் பி. ப. 1.00 மணிக்கு செயலகத்திற்கு அருகாமையில் உள்ள [illegible]வனபரிபாலன இலாகாவுக்கு சமுகமளிக்குமாறு யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபை அன்புடன் வேண்டுகிறது.

(சி-6527)

### சிந்தனைக்கு

அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே!
பெரும்புகழ் நுமக்கே இசைக்கின்றேன்
பிரமதேவன் கலையிங்கு நீரே!

- மகாகவி பாரதியார்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 01-05-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## புதிய எண்ணங்கள் மலரட்டும்

இன்று தொழிலாளர் தினம்.

உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என உரக்கக் கோசம் எழுப்பிய / எழுப்புகின்ற தினம்.

நிலப் பிரபுத்துவ காலத்தில் இருந்து அடக்கப்பட்டு வந்த தொழிலாளர்கள் 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமது உரிமைக்கான போராட்டங்களை வேலை நிறுத்தங்கள் மூலம் ஆரம்பித்தனர். 1886ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி ஆரம்பித்த போராட்டம் 1889-ல் வெற்றியளித்தது. இதற்காகப் பலர் பல தியாகங்களைச் செய்ய வேண்டியிருந்தது. ஆனால் தொழிலாளரின் உறுதியான போராட்டம் பல இழப்புக்களின் பின் அவர்களுக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்தது.

இதன் பின்னர் இந்நூற்றாண்டின் முற்பகுதியில் சோவியத் யூனியனில் ஏற்பட்ட கம்யூனிசப் புரட்சியானது தொழிலாளர்கள் வர்க்கத்திற்குப் புதிய தலைமையாக அமைந்தது. உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என்ற கோசமும் எழுந்தது. 'தொழிலாளர் சர்வதேசியம்' என்ற கோட்பாடும் எழுந்தது. ஆனால் இன்று இக்கோட்பாடு எந்தளவிற்கு நடைமுறைச் சாத்தியமானது?

இன்று உலகின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள தொழிலாளர்கள் தமக்கெனத் தனித்தனியான பிரச்சினைகளைக் கொண்டுள்ளார்கள். ஓர் ஐரோப்பியத் தொழிலாளியினதும், சிறிலங்காத் தொழிலாளியினதும், தமிழீழத் தொழிலாளியினதும் பிரச்சினைகள் ஒன்றாக இல்லை. அத்தோடு இன்று உலகில் இனத்துவ தேசியமே முக்கிய பிரச்சினையாகக் கூர்ப்படைந்துள்ள நிலையில் அவற்றையும் கடந்து உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என்ற கோட்பாடு / கோசம் எந்தளவிற்கு நடைமுறைச் சாத்தியமானது?

இன்று தமிழீழத் தொழிலாளர்கள் என்றுமில்லாத வகையில் பெரும் இன்னல்களுக்கும், துயர்களுக்கும் உள்ளாகியுள்ளனர். இவர்களைத் தொழிலாளர்கள் என்ற வர்க்கத்திற்குள் அடக்க முடியுமா என்ற கேள்வியே எழுப்பப்படும்

# உழைக்கும் மக்களின் தளரா உறுதி; தலைவர் பிரபாகரன் பாராட்டு

**தலைவர் பிரபாகரன் கடந்த ஆண்டு மேதினம் தொடர்பாக தமிழீழ மக்களுக்கு விடுத்த செய்தியினை இங்கே தருகின்றோம்.**

எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே,

இன்று தொழிலாளர் நாள். உலகப் பாட்டாளிகளின் எழுச்சி நாள், உழைக்கும் மக்களின் ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் புரட்சி நாள்.

உழைக்கும் மக்களின் உழைப்பு சக்தியே ஒரு தேசத்தின் ஜீவாதார சக்தி. உழைப்பவனே பொருளுலகத்தைப் படைக்கின்றான். மனித வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்கிறான். உழைக்கும் கரங்களே மனித வாழ்க்கையை இயக்கும் கரங்கள்.

இந்த உழைக்கும் மனிதர்களுக்கு நாம் இன்று விழா எடுக்கிறோம்.

ஒரு யுத்த சூழ் நிலையில், எதிரியின் படையெடுப்புகளுக்கு மத்தியில், பெரியதொரு பொருளாதாரச் சுமையின் அழுத்தங்களைத் தாங்கி நின்று நாம் பாட்டாளிகள் தினத்தைக் கொண்டாடுகிறோம்.

தமிழீழப் பாட்டாளி வர்க்கமானது என்றுமில்லாத பெரும் நெருக்கடியைச் சந்தித்து நிற்கிறது. இனவாத அரசின் ஈவிரக்கமற்ற கொள்கையால் உழைத்து வாழும் எமது மக்கள் ஒரு ஜீவமரணப் போராட்டத்தை எதிர்கொண்டு நிற்கிறார்கள். எமது மக்களின் உழைக்கும் கரங்களைத் துண்டித்து விட்டு அவர்களின் நாளாந்த வாழ்க்கையை நரகமாக்கிவிட எதிரியானவன் கங்கணம் கட்டி நிற்கிறான். எமது பாட்டாளி வர்க்கம் மீது மிகவும் கொடூரமான ஒரு பொருளாதார யுத்தம் ஏவிவிடப்பட்டிருக்கிறது.


ஒரு மக்கள் சமுதாயத்தின் பொருளாதார வாழ்விற்கு மூலாதாரமான உழைப்பு சக்தியை முடக்கிவிட்டால், அந்த மக்களின் மனவுறுதியை, ஆன்ம திடத்தை, போராட்ட உறுதியை உடைத்தெறிந்து விடலாம் என்பது சிங்கள ஆளும் வர்க்கத்தின் தந்திரோபாயம். இது எல்லாக் காலத்திலும், எல்லா சமூகங்களிலும், எல்லா அடக்குமுறையாளர்களாலும் கையாளப்படும் ஒரு ஒடுக்குமுறை யுக்தி. எமது எதிரியும் நீண்ட காலமாகவே இந்த அணுகுமுறையைக் கடைப்பிடித்து வருகிறான். இதன் ஒட்டுமொத்த விளைவாக உழைத்து வாழும் எமது மக்கள் சந்தித்த சோகம் நிறைந்த வரலாற்றைச் சொற்களால் விபரிக்க முடியாது.

போராட்டப் பளுவை ஒரு தோளிலும், பொருளாதாரப் பளுவை மறு தோளிலுமாக, உறுதி தளராது சுமந்து நிற்கும் தமிழ்ப்பாட்டாளி வர்க்கத்தை நான் பாராட்டுகின்றேன்.

புயலாகச் சீண்டும் எதிரியின் அடக்குமுறை அழுத்தங்களை எல்லாம் மலையாகத் தாங்கி நிற்கும் எமது மக்களை நான் பாராட்டுகிறேன்.

சாவுக்கும் அழிவுக்கும் அப்பால், பசிக்கும் பஞ்சத்திற்கும் அப்பால், சுயநல வாழ்வின் சுகபோகங்களுக்கும் அப்பால், ஒரு சுதந்திரமான கௌரவமான வாழ்வில் காதல் கொண்டு நிற்கும் எமது மக்களின் இலட்சியப் பற்றை நான் பாராட்டுகிறேன்.

கல்லும் முள்ளும், ஏற்றமும் இறக்கமும் நிறைந்த, மிகவும் கடினமான பாதையூடாக எமது விடுதலைப் பயணம் தொடர்கிறது. எதிரியானவன் இந்தப்பாதை வழியே மேலும் முட்டுக்கட்டைகளைப் போடலாம். எமது பயணத்தில் சோர்வையும் களைப்பையும் ஏற்படுத்த இடையூறுகளை விளைவிக்கலாம். எத்தனை தடைகள்



ஏற்பட்ட போதும் எத்தனை துன்பங்கள் ஏற்பட்ட போதும், கொண்ட கொள்கையில் நம்பிக்கையும் அந்த நம்பிக்கையின் அத்திவாரத்தில் கட்டப்பட்ட உறுதியும், அந்த உறுதியின் நெருப்பாக எரியும் விடுதலை வேட்கையும் எம்மிடம் உள்ளவரை எமது இலட்சியப் பயணம் வெற்றியில் முடியும் என்பது நிச்சயம்.

ஒரு விடுதலைப் போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத்தின் பங்கு பிரதானமானது. தமிழீழப் பாட்டாளி வர்க்கமானது, ஒருபுறம் முதலாளித்துவ சுரண்டல் முறையையும், மறுபுறம் இனவாத ஒடுக்குமுறையையும் சந்தித்து நிற்கிறது. இந்த இருதலைப்பட்ச முரண்பாட்டில் இனவாத ஒடுக்குமுறையே பிரதானமானது.

இன ஒடுக்கு முறையைத் தனது பிரதான எதிரியாகச் சந்தித்து நிற்கும் தமிழீழப் பாட்டாளி வர்க்கம் அந்தஇன ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடுவதையே தனதுமுதன்மையான பணியாகக்கொள்ள வேண்டும். ஏனென்றால், இன ஒடுக்குமுறையானது தமிழ்ப் பாட்டாளி வர்க்கத்தின் வாழ்க்கையையே சீரழிக்க எத்தனிக்கிறது. எனவே இனஒடுக்குமுறைக்கு எதிர்ாகப்போராடுவது தவிர்க்கமுடியாத வரலாற்று நிர்ப்பந்தமாக எழுந்துள்ளது. இந்தப் போராட்டமானது வர்க்கப்போராட்ட வரம்புகளுக்கு அப்பால் ஒருதேசிய போராட்டமாக, தேசிய மக்களின் போராட்டமாக, தேசிய வர்க்கங்களின் ஒன்றிணைந்த போராட்டமாக உயர்வடிவம் பெறுகிறது. ஒரு தேசிய விடுதலை இயக்கத்துடன் அணி சேர்ந்து கொள்வதன் மூலமே தமிழீழத் தொழிலாளர் வர்க்கம் தேசிய போராட்டத்திற்கு உருப்படியான முறையில் பங்களிக்க முடியும். இதுவேஎமது உழைக்கும்மக்களின் விடிவிற்கும் விமோசனத்திற்கும் வழிகோலும்.

சிங்களப் பாட்டாளி வர்க்கத்திற்கு நாம் எமது நேசக்கரத்தை நீட்டி நிற்கிறோம். சிங்கள ஆளும் வர்க்கத்தால் ஒடுக்கப்பட்டு, நசுக்கப்பட்டு, சுரண்டப்பட்டுவரும் சிங்களப் பாட்டாளி மக்களை நாம் ஒரு நேச சக்தியாகவே கருதுகிறோம்.

தமிழ் - சிங்களப் பாட்டாளிகள் மத்தியில் வர்க்க ஒருமைப்பாடு ஏற்படுவதானால் தமிழரின் தன்னாட்சி உரிமையை சிங்களத் தொழிலாளர் வர்க்கம் அங்கீகரிக்கவேண்டும். தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஆதரிக்க வேண்டும். ஆனால்அதே சமயம் தென்னிலங்கைப்பாட்டாளி வர்க்கமானது சிங்கள-பௌத்த பேரினவாத ஆட்சியம்மப்பிற்குமுண்டுகொடுத்து நிற்கும்வரை தமிழ் - சிங்கள வர்க்க ஒருமைப்பாடு சாத்தியமாகப்போவதில்லை

பேரினவாத சிந்தாந்தப்பிடியிலிருந்து விடுதலை பெற்று விழிப்புணர்வு அடையும் பொழுதுதான் தமிழரின்சுதந்திரப்போராட்டத்தின் புரட்சிகரத் தன்மையைச் சிங்களமக்கள் புரிந்து கொள்வார்கள். தமிழரின் விடுதலையில் தான் தமக்கும் விமோசனம் உண்டு என்ற உண்மையை உணர்ந்து கொள்வார்கள்,

பாட்டாளி வர்க்கத்தின் எழுச்சி தினமாகிய இன்று நாம் ஒரு விதி செய்துகொள்வோம்.

எந்தவித சவால்களையும் எதிர்கொண்டபோதும் எமது இலட்சியப்பயணத்தில் உறுதி தளரமாட்டோம் என ஒரு வீர சபதம் செய்வோம்.

★

சிரேஷ்ட பொலிஸ் அதிபரை

## விசாரணையிலிருந்து நீக்க எதிர்க் கட்சிகள் வலியுறுத்து

(கொழும்பு)

லலித் அத்துலத் முதலியின் கொலைக்கான விசாரணையில் இருந்து சிரேஷ்ட பொலிஸ் உயர் அதிகாரி திரு றோணி முனசிங்காவை நீக்க வேண்டுமென்று எதிர்க்கட்சிகள் பொலி

என்றும் இவரை நீக்குவதன் மூலம் விசாரணையில் மக்களை நம்பிக்கை கொள்ள செய்ய முடியும் என்றும் இதன் மூலம் உண்மையான தகவல்களை விசாரணைக்குழு பெற்று கொள்ளும் என தெரிவிக்கப்

## உற்பத்தி எழுச்சிவார போட்டி முடிவுகள்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் நடாத்தப்பட்ட உற்பத்தி எழுச்சி

கிழக்கு
2. துலாப் பட்டை

சுமதி, குமாரசாமி வசந்தி, வரணி.
2-ம் இடம் - கந்தசாமி தர்ம

புதிய தலைமையாக அமைந்தது. உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என்ற கோசமும் எழுந்தது. 'தொழிலாளர் சர்வதேசியம்' என்ற கோட்பாடும் எழுந்தது. ஆனால் இன்று இக்கோட்பாடு எந்தளவிற்கு நடைமுறைச் சாத்தியமானது?

இன்று உலகின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள தொழிலாளர்கள் தமக்கெனத் தனித்தனியான பிரச்சினைகளைக் கொண்டுள்ளார்கள். ஓர் ஐரோப்பியத் தொழிலாளியினதும், சிறிலங்காத் தொழிலாளியினதும், தமிழீழத் தொழிலாளியினதும் பிரச்சினைகள் ஒன்றாக இல்லை. அத்தோடு இன்று உலகில் இனத்துவ தேசியமே முக்கிய பிரச்சினையாகக் கூர்ப்படைந்துள்ள நிலையில் அவற்றையும் கடந்து உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என்ற கோட்பாடு / கோசம் எந்தளவிற்கு நடைமுறைச் சாத்தியமானது?

இன்று தமிழீழத் தொழிலாளர்கள் என்றுமில்லாத வகையில் பெரும் இன்னல்களுக்கும், துயர்களுக்கும் உள்ளாகியுள்ளனர். இவர்களைத் தொழிலாளர்கள் என்ற வர்க்கத்திற்குள் அடக்க முடியுமா என்ற கேள்வியே எழுப்பப்படும் அவல நிலை உள்ளது. ஏனெனில் தொழிலாளிகளான பலர் இன்று தொழிலிழந்து போய் உள்ளனர். இந்நிலையில் இவர்களை சிறிலங்கா தொழிலாளியினுடனோ அன்றி உலகில் உள்ள ஏனைய தொழிலாளர்களுடனோ ஒப்பிட முடியுமா?

எவர் எவ்வளவுதான் தொழிலாளர் வர்க்கம் பற்றிப் பேசினாலும் சிங்கள தொழிலாளர் வர்க்கத்திற்கும், தமிழ் தொழிலாளர் வர்க்கத்திற்கும் இடையில் உள்ள இன முரண்பாடுகளை நீக்கி தொழிலாளர் வர்க்கத்தினை ஒன்றுபடுத்த முடியுமா? சிங்கள தொழிலாளர் வர்க்கமோ பௌத்த பேரினவாத சக்திகளின் அபிலாசைகளை நிறைவு செய்ய உழைத்துக் கொண்டிருக்கின்றது. தமிழ்த் தொழிலாளர் வர்க்கமோ பௌத்த பேரினவாதிகளின் இன ஒடுக்குதலுக்கு முகம் கொடுத்து தொழிலிழந்து, தொழிற் கூடங்களை இழந்து அல்லற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

அத்தோடு, கடந்த காலத்தில் கம்யூனிஸ்ட்டுகள் என்று தம்மைப் பிரகடனப்படுத்திய சிங்களத் தலைவர்கள், தொழிலாளர்கள் கூட இனத்துவத்தைக் கடந்து தமிழருக்காகக் குரல்கொடுக்கவோ அன்றிப் போராடவோ முன்வரவில்லை. இதேவேளை மே தினத்தின் அன்றாவது கட்சி வேறுபாடுகளை மறந்து அவர்களினால் ஓர் அணியில் சேர்ந்து தொழிலாளர் வர்க்கத்திற்காகக் குரல் கொடுக்க முடியவில்லை. நான்கு பேர் சேர்ந்து நான்கு கூட்டம் போடுகின்றார்கள். இந்நிலையில் உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என்பதும், கோசமிடுவதும் ஒரு யதார்த்த பூர்வமான நிலையில் சரியானதா என்பதே இன்றுள்ள கேள்வியாகும்.

இன்று உலகில் இனத்துவ தேசியமே கூர்மையானது. அதன் அடிப்படையிலேயே மக்களால் முரண்பாடுகளைக் கடந்து ஒன்று சேர முடியும். இதுவே உலகம் தந்த பாடம். இதுவே தொழிலாளர்கள் வர்க்கத்திற்கும் பொருந்தும். அடக்கப்பட்ட தமிழ்மக்கள் ஒன்று சேர்ந்து தமது விடுதலையை வென்றெடுக்கும்போதுதான் தமிழ்த் தொழிலாளர்களின் விடிவு பிறக்கும்.

இந்நிலையில் தமிழர் பிரதேசங்களில் நடைபெறவுள்ள மேதினங்கள் புதுவடிவம் பெறவேண்டும், தமிழர் மீதான ஒடுக்குமுறைக்கு எதிரான குரல் ஓங்கி ஒலிக்க வேண்டும். அதுவே எமது தொழிலாளரின் வெற்றியாகவும் அமையும்.

மாக்கிவிட்ட எதிரியானவன் கங்கணம் கட்டி நிற்கிறான். எமது பாட்டாளி வர்க்கம் மீது மிகவும் கொடூரமான ஒரு பொருளாதார யுத்தம் ஏவிவிடப்பட்டிருக்கிறது.

ஒரு மக்கள் சமுதாயத்தின் பொருளாதார வாழ்விற்கு மூலாதாரமான உழைப்பு சக்தியை முடக்கிவிட்டால், அந்த மக்களின் மனவுறுதியை, ஆன்ம சுதந்திரமான கௌரவமான வாழ்வில் காதல் கொண்டு நிற்கும் எமது மக்களின் இலட்சியப் பற்றை நான் பாராட்டுகிறேன்.

கல்லும் முள்ளும், ஏற்றமும் இறக்கமும் நிறைந்த, மிகவும் கடினமான பாதையூடாக எமது விடுதலைப் பயணம் தொடர்கிறது. எதிரியானவன் இந்தப்பாதை வழியே மேலும் முட்டுக்கட்டைகளைப் போட பயணம் வெற்றியில் முடியும் என்பது நிச்சயம்.

ஒரு விடுதலைப் போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத்தின் பங்கு பிரதானமானது. தமிழீழப் பாட்டாளி வர்க்கமானது, ஒருபுறம் முதலாளித்துவ சுரண்டல் முறையையும், மறுபுறம் இனவாத ஒடுக்குமுறையையும் சந்தித்து நிற்கிறது. இந்த இருதலைப்பட்ச வர்க்கங்களின் ஒன்றிணைந்த போராட்டமாக உயர்வடிவம் பெறுகிறது. ஒரு தேசிய விடுதலை இயக்கத்துடன் அணி சேர்ந்து கொள்வதன் மூலமே தமிழீழத் தொழிலாளர் வர்க்கம் தேசிய போராட்டத்திற்கு உருப்படியான முறையில் பங்களிக்க முடியும். இதுவே எமது உழைக்கும்மக்களின் விடிவிற்கும் விமோசனத்திற்கும் வழி நாம் ஒரு விதி செய்துகொள்வோம்.

எந்தவித சவால்களையும் எதிர்கொண்டபோதும் எமது இலட்சியப்பயணத்தில் உறுதி தளரமாட்டோம் என ஒரு வீர சபதம் செய்வோம்.

★

---

சிரேஷ்ட பொலிஸ் அதிபரை

## விசாரணையிலிருந்து நீக்க எதிர்க் கட்சிகள் வலியுறுத்து

(கொழும்பு)

லலித் அத்துலத் முதலியின் கொலைக்கான விசாரணையில் இருந்து சிரேஷ்ட பொலிஸ் உயர் அதிகாரி திரு றோணி முனசிங்காவை நீக்க வேண்டுமென்று எதிர்க்கட்சிகள் பொலிஸ்மா அதிபர் ஏனஸ் பெரேராவுக்கு கடிதம் எழுதியுள்ளன.

மக்களிடம் நம்பிக்கை இழந்த ஒரு பொலிஸ் அதிகாரி இந்த விசாரணையில் இருப்பது விசாரணையை பாதிக்கும் என்றும் இவ் விசாரணையை இலங்கை மட்டும் அல்ல முழு உலகமே அவதானிக்கின்றது என்றும் அக்கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளது.

இந்த பொலிஸ் உயர் அதிகாரி பத்திரிகையாளர் றிச்சர்ட்டி சொய்சாவின் கொலையினால் மக்கள்மத்தியில் நம்பிக்கைஇழந்துகாணப்பட்டுள்ளார் என்றும் இவரை நீக்குவதன் மூலம் விசாரணையில் மக்களை நம்பிக்கை கொள்ள செய்ய முடியும் என்றும் இதன் மூலம் உண்மையான தகவல்களை விசாரணைக்குழு பெற்றுக்கொள்ளும் என தெரிவிக்கப்பட்டது.

---

### விமான நிலையம் விஸ்தரிக்க நடவடிக்கை

வவுனியா தச்சன்குளம் விமான நிலைய விஸ்தரிப்பு நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படலாம் என கோவில்குளம், இறம்பைக்குளம் மக்கள் அச்சம்கொண்டுள்ளனர். இங்குள்ள எட்டு வீதிகளில் விமானப்படையினர் கொங்கிரீட் தூண்களைக் கொண்டுவந்துநாட்டியுள்ளனர்

---

# உற்பத்தி எழுச்சிவார போட்டி முடிவுகள்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் நடாத்தப்பட்ட உற்பத்தி எழுச்சி வாரப் போட்டியில் இறுதிக் கட்டப் போட்டிகள் கடந்த 27-ம் திகதி ஊரெழு அம்மன் கோவிலடியில் நடைபெற்றன.

இப் போட்டியின் வெற்றியீட்டியோர் விபரம்:-

**1. தோட்டம் கொத்துதல்**

1-ம் இடம் - சீனி துரைராஜா, சங்குவேலி.

2-ம் இடம் - பொன்னுத்துரை சுபாகரன், சண்டிலிப்பாய்.

3-ம் இடம் - குண்டுமணி தர்மகுலசிங்கம், இமையாணன் கிழக்கு

**2. துலாப் பட்டை மூலம் நீர்இறைத்தல்**

ஆண்கள்

1-ம் இடம் - தங்கவேலு தவச்செல்வம், பொன்னன் தவநேசன், இமையாணன் கிழக்கு

2-ம் இடம் - வேலன்மதிசீலன், நாகமுத்து தட்சணாமூர்த்தி, ஏழாலை.

3-ம் இடம் - கந்தன் தவராசா துரையன் அழகேசன், இமையாணன்.

பெண்கள்

1-ம் இடம் - குமாரசாமி சுமதி, குமாரசாமி வசந்தி, வரணி.

2-ம் இடம் - கந்தசாமி தர்மஞானேஸ்வரி, கந்தசாமி தர்மரத்தினேஸ்வரி, வரணி.

3-ம் இடம் - வல்லி அருந்தவம், கந்தையா தேவகுமாரி, வரணி.

**3. பனைமரம்ஏறுதல்**

1-ம் இடம் - தில்லையம்பலம் அருமைத்துரை, புன்னாலைக்கட்டுவன்.

2-ம் இடம் - கணேசு இளஞ்சிங்கம், அல்வாய்வடக்கு.

3-ம் இடம் - நடராசா இரதீஸ்வரன், அரியாலை.

**4. குட்டான் இழைத்தல்**

1-ம் இடம் - கந்தசாமி செல்வநாயகம், வரணி.

2-ம் இடம் - இரஞ்சிதராஜன் ரஞ்சனாதேவி, அல்வாய் வடக்கு.

3-ம் இடம் - கந்தசாமி தர்மஞானேஸ்வரி, வரணி.

**5. கிடுகு பின்னுதல்**

1-ம் இடம் - வே பால்சாமி, யாழ்ப்பாணம்.

2-ம் இடம் - கட்டையன் பராசக்தி, வரணி.

3-ம் இடம் - ஆ. லீலாவதி, விக்னேஸ்வரா முகாம், சங்கானை.

**6. உணவு தயாரித்தல்**

1-ம் இடம்-சந்ரா தேவநேசன் மானிப்பாய்.

2-ம் இடம் - சாந்தினி திருநாவுக்கரசு, புத்தூர்.

3 ம் இடம் - திருமதி சந்திரவதனி அம்மாள் பொன்னம்பலம், ஆவரங்கால்.

**7. பதனீர் உற்பத்தி**

1-ம் இடம்- த. யோகேந்திரம், பளை.

2-ம் இடம் - பொ. மாணிக்கசிங்கம், அரியாலை.

3-ம் இடம் - முருகேசு விமலராசா, சங்கானை.

இவர்களுக்கான பரிசில்கள் இன்று நடைபெறும் பொதுக் கூட்ட மேடையில் வைத்து வழங்கப்படும்.

---

# மேதின பேரணி, கூட்ட ஏற்பாடுகள்

இன்றைய மேதின ஊர்வலம் கண்டி வீதி, ஆஸ்பத்திரி வீதிச் சந்தியிலிருந்து பிற்பகல் இரண்டு மணிக்கு ஆரம்பமாகும் எனவும், ஆஸ்பத்திரி வீதி, கோவில்வீதி, நல்லூர் பின் வீதியூடாக பருத்தித்துறை வீதி, அரசடி வீதி, கந்தர்மடச் சந்தி, குகன்வீதி, பிறவுண்வீதி வழியாக கலட்டிச் சந்தியை அடைந்து அங்கிருந்து தொழில்நுட்பக் கல்லூரியின் முன் ஒழுங்கை வழியாக யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தை சென்றடையும் எனவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் துறைச் செயலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது; தேசியக் கொடியை அடுத்து அணிவகுப்புகளும், அதனைத் தொடர்ந்து கூட்டுறவுத்துறை, கல்விசார் ஊழியர்கள், உள்ளூராட்சித் திணைக்களம், சுகாதாரப்பகுதி, வங்கி ஊழியர், குடிசார் பொறியியல் துறையினர், வடமராட்சிக் கோட்டம், தென்மராட்சிக் கோட்டம், தீவகக்கோட்டம், கடற்புலிகளின் கோட்டம், வலிகாமம் கோட்டம் என்னும் ஒழுங்கிலும் ஊர்வலம் இடம்பெறும்.

ஊர்வலத்தில் பங்கேற்கும் ஊர்திகள் யாவும் கலட்டிச் சந்தியிலிருந்து நாச்சிமார் கோயில் வீதிவழியாக வந்து யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மைதானத்தில் தரித்து வைக்கப்படும்.

| கோட்டம் | ஊர்வலம் ஆரம்பமாக முன்பு வாகனம் தரிக்கும் இடம் | ஊர்வல முடிவின் பின் வாகனம் தரிக்கும் இடம் |
|---|---|---|
| வடமராட்சி | கச்சேரி நல்லூர் வீதி புகையிரத கடவைக்கு அருகாமை. | திருநெல்வேலி சந்தைக்கு முன்பாக |
| தென்மராட்சி | கண்டி வீதியில்கச்சேரிக்குக் கிழக்குப் புறமாக | திருநெல்வேலி சிவன் கோவிலடியில் [சென்றல் நர்ஸிங்ஹோம் அருகாமை] |
| தீவகக் கோட்டம் | சோமசுந்தரம் ஒழுங்கை, [நரிக்குண்டடி] | கலட்டிச் சந்தி |
| கடற்புலிகள் | யாழ். பூங்கா வீதியில் இருக்கும் உ. அ. அதிபர் பணிமனை முன் | ஆத்திசூடி வீதி |
| வலிகாமம் | பிரதானவீதி, தண்ணீர்த் தாங்கியடி | நாச்சிமார் கோவிலடி |
| கோப்பாய் வட்டம் | | பொற்பதி வீதி |
| கல்வி ஊழியர் | சென்ஜோன்ஸ் பாடசாலை | |
| திணைக்களங்கள் | யாழ். செயலக வளாகம் | |
| கூட்டுறவாளர்கள் | வன. இலாகா செயலகம் | |
| வங்கி ஊழியர் ) குடிசார் பொறியியல்துறை ) | யாழ். செயலக வளாகம் | |

துவிச்சக்கர வண்டிகள் யாவும், கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி மைதானத்திலும் திருநெல்வேலி சந்தைக்கு முன்பாகவும், கொக்குவில் இந்துக் கல்லூரியிலும், திருநெல்வேலி சிவன்கோவிலடியிலும் நிறுத்தி வைக்கப்படலாம். பேரணி நிறைவுற்றதும் பொதுக்கூட்டம் இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



**கந்தசாமி விஜயக்குமார்**
**(விஜயன்)**

[சாவகச்சேரி யா/டிறிபேக்கல்லூரி O/L மாணவன்]

பிறப்பு: 01-06-1973 இறப்பு: 01-05-1990

முடிந்தது ஆண்டுகள் மூன்று
முடியுமா நிறைவுகள் என்றும்
காலங்கள் சென்றாலும் - எம்
கவலைகள் தீராது.

டச்சுவீதி,
சாவகச்சேரி.

பெற்றோர், உடன்பிறப்புக்கள்,
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

(4785)

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி




# ஆயுதம் தாங்கிய கோஷ்டி மூன்று இலங்கைத் தமிழரை மீட்டது

## மாமண்டூரில் துணிகர சம்பவம்

(சென்னை)

சென்னை மாமண்டூர் அருகே ஆயுதம் தாங்கிய நால்வர் அடங்கிய குழுவொன்று தடா சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருந்த மூன்று இலங்கையர்களை மீட்டுச் சென்னுள்ளது.

இச் சம்பவத்தில் துப்பாக்கி நபர்களின் துப்பாக்கி வேட்டுக்கு இலக்காகி தமிழக பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பலியானார்; மற்றுமொரு கான்ஸ்டபிள் படுகாயமடைந்தார்.

தடாக் கைதிகளை மீட்டுச் சென்ற இந்தக் குழுவினர் விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என இந்திய வானொலி நேற்று குறிப்பிட்டது.

சென்னை மத்திய சிறையில் தடா சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த கிருபன், சந்திரன், விக்டர், ரவி ஆகிய நால்வரும் பாளையங்கோட்டை சிறைக்கு மாற்றுவதற்காக பொலிஸ் வானில் கொண்டு செல்லப்பட்டபோதே இச் சம்பவம் இடம்பெற்றதாக மேலும் கூறப்படுகிறது. ஒரு சப் இன்ஸ்பெக்டர் மற்றும் மூன்று பொலீஸ்காரர் .ஆகியோர் சகிதம் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் சென்னையிலிருந்து புறப்பட்ட மேற்படி பொலிஸ் வான் இரவு பதினொரு மணியளவில் மாமண்டூர் வந்தடைந்தது. அங்கு சாலையோரம் இருந்தஹோட்டல் ஒன்றில் காவலர்களும், கைதிகளும் சாப்பிட்டுவிட்டு வானை நோக்கித் திரும்பிக்கொண்டிருக்கையில் எங்கிருந்தோ திடீரென வந்த வெள்ளைநிற அம்பாசிடர் காரிலிருந்து குதித்த நான்கு துப்பாக்கி நபர்கள் பொலிசாரைத் தாக்கிவிட்டு கைதிகளை மீட்டுச்சென்றனர். துப்பாக்கி வேட்டுக்கு இலக்காகி மோகன் என்ற பொலிசார் அவ்விடத்திலேயே உயிர் இழந்தார். தலைமை கான்ஸ்டபிள் சக்கரவர்த்தி காயமடைந்தார். விக்டர் என்ற தடாக் கைதி மட்டும் இச் சம்பவத்தில் தப்பிக்க இயலவில்லை என்றும், ஏனைய மூன்று கைதிகளும் துப்பாக்கி நபர்களுடன் அம்பாசிடர் காரில் தப்பிச்சென்றுவிட்டதாகவும் கூறப்படுகின்றது.

மாமண்டூர் சம்பவத்தின் போது பயன்படுத்தப்பட்ட அம்பாசிடர் கார் மகாபலிபுரம்அருகில் திருவிடந்தைஎன்னும் இடத்தில் வைத்து கடத்தப்பட்டது எனவும் இந்தக் கார் பின்னர் சேலம் மாவட்டம் மேட்டூர் அருகே எரிந்த நிலையில் மீட்கப்பட்டது எனவும் பொலிசார் தெரிவித்தனர். இந்த துப்பாக்கி நபர்கள் அந்த காட்டுப் பகுதியில் ஒளிந்திருக்கலாம் என்பதால் அங்கு தீவிர தேடுதல் நடைபெற்று வருவதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

## இன்று

...ரம் அடக்கும்பொலிஸ் பிரிவும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. அரசியல் கட்சிகள் பல இன்று கொழும்பில் கூடவுள்ளதால் தற்போதுள்ள சூழ்நிலையில் இவர்களுக்கு இடையில் மோதல்கள் ஏற்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்ககட்சி ஆதரவாளர்களை எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் தாக்கலாம் எனவும் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

## இரண்டு

அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டது என்றும் இது பின்னர் தவறு என்றும் அடை...

# தமிழ்நாடு அரசு புலிகளுக்கு உடந்தை?

## தமிழக எதிர்க்கட்சித் தலைவர் சந்தேகம்

(சென்னை)

தமிழ் நாட்டில் எல்.ரீ.ரீ ஈ. யினர் இல்லை என தமிழக அரசு கூறியது முழுப்பொய் என்பதை மீண்டும் மாமண்டூர்சம்பவம் நிரூபித்துள்ளது என காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தமிழக எதிர்க்கட்சித் தலைவர் எஸ் ஆர். பாலசுப்பிரமணியம் இந்திய வானொலிக்குத் தெரிவித்தார்.

தமிழக அரசின் அசமந்தப் போக்கே இச்சம்பவத்தில் புலனாகிறது. நான்கு தடா கைதிகளுக்கு நான்கு பொலிசாரே காவலாகச் சென்றது தமிழக அரசின்போக்கில்சந்தேகத்தை உண்டுபண்ணுகிறது என்றும் அவர்மேலும் தெரிவித்தார்.

கைதிகள் மீட்பு விவகாரம்

# விசாரணைக்குழு அமைக்க தமிழக அரசு முடிவு

(சென்னை)

சென்னைக்கருகே மாமண்டூரில் மூன்று இலங்கைக் கைதிகள்நான்கு ஆயுதபாணிகளால் மீட்கப்பட்டு சென்றமை குறித்து விசாரணை நடாத்த நீதிபதி தலைமையிலான விசாரணைக்குழு ஒன்றை தமிழக அரசு அமைக்கும் என முதலமைச்சர் ஜெயலலிதா சட்டப் பேரவையில் நேற்று அறிவித்தார்.

உணவருந்த கைதிகளுடன் சென்ற பொலிசார் அப்பொழுது கைதிகளுக்கு விலங்கிடவில்லை என்றும், ஆயுதங்களை எடுத்துச் செல்லவில்லை என்றும் ஜெயலலிதா சுட்டிக்காட்டினார். இது சம்பந்தமாக இரு உயர் அதிகாரிகள் மீது உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். இதில் ஏதோ சதித்திட்டம் இருப்பதாகவும் ஜெயலலிதா மேலும் குறிப்பிட்டார்.

இதேசமயம் குறுக்கிட்டுப் பேசிய கம்யூனிஸ்ட்கட்சி உறுப்பினர் பழனிச்சாமி முதலமைச்சர் ஜெயலலிதா தனது அறிக்கையில் எந்த இடத்திலேனும் ஆயுதபாணிகளாக வந்து மீட்டுச் சென்றவர்கள் எல். ரீ. ரீ. ஈ.யினர் என்று ஏன் குறிப்பிடவில்லை என்று கேட்டார். அவர்மேற்கொண்டு பேச சபாநாயகர்சேடப்பட்டிமுத்தையா அனுமதிக்கவில்லை.

இதனிடையே கைதிகள் மீட்கப்பட்ட சம்பவத்தை காங்கிரஸ் கட்சியினர் கண்டித்துள்ளனர். இதற்கு தமிழக அரசும் உடந்தையோ என சந்தேகிக்க தோன்றுவதாக வாழப்பாடி இராமமூர்த்தி தெரிவித்துள்ளார்.

# அ. தி. மு.க. அரசு கலைப்பு; செய்தியில் உண்மையில்லை

(டில்லி)

அண்ணா திராவிட முன்...

...கட்கில்

தெரிவித்துள்ளார்.


இந்துமத குருமார் ஒன்றியம்
யாழ்ப்பாணம்

## 1993 மேதினம்

1993 மே 1 ஆம் திகதி சனிக்கிழமை பி. ப. 2.00 மணிக்கு யாழ். செயலக முன்றலில் இருந்து யாழ். பல்கலைக்கழக மைதானம் வரை நடைபெற இருக்கும் மாபெரும் மேதின ஊர்வலத்திலும் அதனை தொடர்ந்துஇடம்பெறும் மேதினக்கூட்டத்திலும் கலந்துகொள்ளுமாறு சகல இந்துமத குருமார் ஒன்றிய உறுப்பினர்களையும் அன்புடன் அழைக்கின்றோம். பி.ப 1மணிக்கு யாழ். செயலக முன்றலில் வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி

சிவஸ்ரீ. வை. கருணாகரேஸ்வரக் குருக்கள்
பொதுச் செயலாளர்.
இந்துமத குருமார் ஒன்றியம்.

(சி/6540)

## உழைப்பவர் நாள் மே நாள்

உழைப்புச் சுரண்டப்பட்டு
உரிமை மறுக்கப்பட்டு
அடிமைகளாக்கப்பட்டு
அல்லலுறும் தொழிலாளர்களே!
ஒடுக்கப்படும் தமிழீழ மக்களே!
ஓரணியில் திரள்வோம்
உரிமைகளை வென்றெடுப்போம்

பணிப்பாளர், பணியாளர், அங்கத்தவர்
கட்டைவேலி - நெல்லியடி ப.நோ. கூ. சங்கம்
(சி-6529)

யாழ். வர்த்தகர் சங்கம் விடுக்கும்

## முக்கிய அறிவித்தல்

இன்று மே 1ஆம் திகதி நடைபெறும் மேதின விழாவிற்கு சகல வர்த்தகர்களையும் தவறாது கலந்து சிறிலங்கா அரசின் பொருளாதாரத் தடை, எரிபொருட் தடை, கிளாலிப் படுகொலை ஆகியவற்றால் தமிழ்மக்கள் படும் துன்பங்களை வெளிநாடுகளுக்கு தெரியப்படுத்துமுகமாக வர்த்தகர்களாகிய நாம் ஒன்றுசேர்ந்து நடத்தும் ஊர்தி, ஊர்வலத்தில் பங்குகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். ஊர்வலம் யாழ். செயலகம் முன்பாக மாலை 2-00 மணிக்கு ஆரம்பமாகும்.


21, மேல்மாடி,
நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

யாழ். வர்த்தகர் சங்கம்

(சி-6546)

## மரண அறிவித்தல்





முன்னாள்

பருத்தித்துறை பிரதேசப் பொறுப்பாளர்

# கப்டன் மொறிஸ்

[செல்வன் தி. பரதராஜன்]

தாயின் மடியில் 12 - 09 - 1969 — தாயக மண்ணில் 01 - 05 - 1989

அன்பான பரதனாகி அவனியிலே திகழ்ந்தவனே
ஆர்வமுடன் மொறிஸ் ஆகி ஆண்டுகள் நான்கின் முன்
இருக்கும் இடமறிந்த இந்திய இராணுவத்தை - தமிழ்
ஈழமதில் நிலைகுலைத்து- ஈடு இணை அற்ற வகையினிலே
உறுதியுடன் போரிட்டு உள்ளமதில் நிலைத்திட்டு
ஊரறிந்த வீரனாகி ஊனுடலை தந்து விட்டு
எல்லோர் மனங்களிலும் எழுச்சி விதை தூவி
ஏற்றம் கொண்டிட்டாய் [கொடி] ஏற வழிசமைத்தாய்
ஐயம் பறந்ததையா ஐக்கியம் நிறைந்ததையா
ஒருமித்த எம் கரங்கள் ஒன்றிணைய வைத்ததையா
ஓங்கிடும் நிலையாலே ஓசைதனை எழுப்புதையா

[உன்னுடன் இறுதி வரைக்கும் நின்ற உன் இனிய தோழர்கள் றம்போ, சிறீ அவர்களுக்கும் எம் இதய அஞ்சலிகள்]

ஆத்தியடி,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.
(4790)

உன் நினைவிலே கலங்கிடும்
அப்பா, அம்மா, அண்ணாமார்,
அண்ணிமார், அக்காமார்,
அத்தான்மார், தம்பி, தங்கை.

---

வானை நோக்கித் திரும்பிக் கொண்டிருக்கையில் எங்கிருந்தோ திடீரென வந்த வெள்ளைநிற அம்பாசிடர்

## இன்று

ரம் அடக்கும்பொலிஸ் பிரிவும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. அரசியல் கட்சிகள் பல இன்று கொழும்பில் கூடவுள்ளதால் தற்போதுள்ள சூழ்நிலையில் இவர்களுக்கு இடையில் மோதல்கள் ஏற்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்ககட்சி ஆதரவாளர்களை எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் தாக்கலாம் எனவும் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

## இரண்டு

அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டது என்றும் இது பின்னர் தவறு என்றும் அடையாள அட்டையில் மாறாட்டம் செய்யப்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் அறிவித்திருந்தமை தெரிந்ததே.

## விசேட

உயர்வு பெறுவதன்மூலம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பதவியைப் பெற்றுக் கொள்ளுவார்கள். பிரதிக் கல்விப் பணிப்பாளர்களாகப் பதவி உயர்வு பெற்றாலும், அவர்களுக்கான சம்பள நிலுவைகள் வழங்கப்படுமா என்பது தொடர்பாக அமைச்சு முடிவெடுக்க வில்லையென்றும் சங்கத்தின் பொதுச்செயலாளர் த. மகாசிவம் தெரிவித்தார்.

---

குறித்து விசாரணை நடாத்த நீதிபதி தலைமையிலான விசாரணைக்குழு ஒன்றை தமிழக அரசு அமைக்கும் என முதலமைச்சர் ஜெயலலிதா சட்டப் பேரவையில் நேற்று அறிவித்தார்.

உணவருந்த கைதிகளுடன் சென்ற பொலிசார் அப்பொழுது கைதிகளுக்கு விலங்கிடவில்லை என்றும், ஆயுதங்களை எடுத்துச் செல்லவில்லை என்றும் ஜெயலலிதா சுட்டிக் காட்டினார். இது சம்பந்தமாக இரு உயர் அதிகாரிகள் மீது உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். இதில் ஏதோ சதித்திட்டம் இருப்ப

# அ. தி. மு.க. அரசு கலைப்பு; செய்தியில் உண்மையில்லை

(டில்லி)

அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு கலைக்கப்படும் என்பது போன்ற செய்திகளில் உண்மையில்லை என்று இந்திரா காங்கிரஸ் கட்சிப் பேச்சாளர் வி. என். கட்கில் தெரிவித்துள்ளார்.

செய்தியாளரிடம் பேசிய அவர் தமிழ் நாடு சட்டப் பேரவையிலிருந்து காங்கிரஸ் உறுப்பினர்களை நீக்கி வைத்திருப்பது ஜனநாயக விரோதமான செயல் என்றார். காங்கிரஸ் கட்சி தமிழகத்தில் சட்ட ஒழுங்கு மீறலைப் பரப்பி வருவதாக அண்ணா தி.மு கழகம் கூறிவருவது ஒரு கட்டுக்கதை என்றும் அவர் கூறினார்.

## நிர்வாக

ஆண்டு காலப்பகுதியில் பூர்த்தி செய்துள்ளதைக் கருத்திற் கொண்டே அமைச்சு இம் முடிவை எடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

பட்டப்பரீட்சை தாமதமாக நடைபெற்றதனால் பெரும்பாலான பட்டதாரிகள் இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சைக்கு தோற்ற முடியாதிருந்தது குறிப்பிடத்தக்கது.

---

# மரண அறிவித்தல்

## குஞ்சர் பொன்னு

திருநெல்வேலி மாரியம்மன் லேனைச் சேர்ந்த குஞ்சர் பொன்னு காலமானார். இவர் காலஞ்சென்ற கதிரவேலு குஞ்சர் அவர்களின் அன்பு மனைவியும். கனகம்மா, தங்கச்சியம்மா, குணரட்ணம் (30 சிறி1762, மினிபஸ் உரிமையாளர்), மல்லிகாதேவி, இராசேந்திரம் ஆகியோரின் அன்புத் தாயாரும் நாகமுத்து, மாரிமுத்து, கனகம்மா செல்லத்தம்பி, ஈஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் தெய்வேந்திரம்(பாறின்), தங்கராஜா(பாறின்), அருந்தவம், மகேந்திரன் (சுசி தையல் நிலையம், மகேந்திரா விறகு காலை உரிமையாளர்), ராசா (டிங்கர்), சற்குணபாலா (ஜேர்மனி), செல்வராஜா (ஜேர்மனி), மகேந்திராதேவி, துரைசிங்கம் (பிரான்ஸ்), வசந்தி, யசி, சுசி, கலா, சுதா, கனிஷ்டா. ஸ்ரீஜனகன், சைலா, பிரேமகுமார் (சுசி தையல் நிலையம்), சுபேந்தினி, பிரதீபன், ராஜாராம், சீதாராம், அபிராமி, அர்ச்சன், சிவகங்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (01 - 05 - 93) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் கொக்குவில் மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குஞ்சர் குணரட்ணம்
(மகன்)
[30 சிறி 1762 மினிபஸ் உரிமையாளர்] (4801)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 -ம் ஆண்டு மே மாதம் 01 -ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

சர் ஜெயலலிதா தனது அறிக்கையில் எந்த இடத்திலேனும் ஆயுதபாணிகளாக வந்து மீட்டுச் சென்றவர்கள் எல். ரீ. ரீ. ஈ.யினர் என்று ஏன் குறிப்பிடவில்லை என்று கேட்டார். அவர்மேற்கொண்டு பேச சபாநாயகர்சேடப்பட்டிமுத்தையா அனுமதிக்கவில்லை.

இதனிடையே கைதிகள் மீட்கப்பட்ட சம்பவத்தை காங்கிரஸ் கட்சியினர் கண்டித்துள்ளனர். இதற்கு தமிழக அரசும் உடந்தையோ என சந்தேகிக்க தோன்றுவதாக வாழப்பாடி இராமமூர்த்தி தெரிவித்துள்ளார்.

## வீரச்சாவு

தெய்வேந்திரா தோற்பிட்டி கோப்பாய் தெற்கு, கோப்பாய்) வீரச்சாவடைந்தார்.

இரு போராளிகளுக்கும் விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## பொலிசாரின்

குறித்து கருத்து வெளியிட்ட எதிரணியினர் தேர்தலை ஒத்திப்போட அரசு செய்யும் தந்திரம் இதுவென தெரிவித்தனர்.

## தேர்தலை

யது பாதுகாப்பு அமைச்சு என்றும் தான் இது தொடர்பாக முடிவுகளை எடுக்க முடியாது என்றும் பொலிஸ்மா அதிபர் தம்மிடம் தெரிவித்ததாகவும் கூறினார்கள்.

பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் மலையகத்தில் சந்திரசேகர் கைது செய்யப்பட்டு இருப்பதாகவும் இவரை விடுதலைசெய்து இவர் தமது கட்சியில் தேர்தல் வேலை செய்ய வழிவகுக்குமாறும் வேண்டுகோள் விடுத்தனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தேர்தல் கூட்டங்களை நடத்த அனுமதி வழங்கப்பட்ட போதும் ஏனைய கட்சிகளுக்கு தேர்தல் கூட்டம் நடத்த அனுமதி வழங்கப்படவில்லை என மலையகத்தில் இருந்து வந்த கட்சி உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

---

தடை, கிளாலிப் படுகொலை ஆகியவற்றால் தமிழ்மக்கள் படும் துன்பங்களை வெளிநாடுகளுக்கு தெரியப்படுத்துமுகமாக வர்த்தகர்களாகிய நாம் ஒன்றுசேர்ந்து நடத்தும் ஊர்தி, ஊர்வலத்தில் பங்குகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். ஊர்வலம் யாழ். செயலகம் முன்பாக மாலை 2-00 மணிக்கு ஆரம்பமாகும்.

21, மேல்மாடி,
நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

யாழ். வர்த்தகர் சங்கம்

(சி-6546)

---

# மரண அறிவித்தல்



## ஆறுமுகம் வைத்தியலிங்கம்

நெடுந்தீவு மேற்கு 2-ம் வட்டாரத்தைச் சேர்ந்த ஆறுமுகம் சின்னாச்சி ஆகியோரின் அன்புமகனும், பத்தினிப்பிள்ளையின் அன்புக்கணவருமான ஆறுமுகம் வைத்தியலிங்கம் நெடுந்தீவில் காலமானார்.

இவர் விசுவறட்ணம், கோபாலகிருஷ்ணன் [கதிரமலை] (பிரான்ஸ்), குகன், திருமதி லட்சுமி குமாரசுவாமி, (காலஞ்சென்ற) திருமதி தவமணிதேவி சின்னத்துரை, திருமதி மல்லிகாதேவி கனகரட்ணம், திருமதி சந்திராதேவி கதிர்காமநாதன், திருமதி லலிதா சிறிதரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நெடுந்தீவு மேற்கில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆ. குமாரசுவாமி
(மருமகன்)

ஜெயகிரி,
1-வது ஒழுங்கை,
முத்து வீதி,
உரும்பராய்.

(4797)

---

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 30-04-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9226

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

41-9759, 28-3754, 41-5583, 28-6020, 26-3893
24-9758. 26-9755, 24-9390, 28-7261, 26-6983
26-6264, 28-0587, 40-7584, 26 3998, 24-9596

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

41-9652, 42-1623.